ஆத்தூர் தொகுதியில் மகளிர் உரிமைத் தொகை விடுபட்டவர்களில் 9 ஆயிரம் பேருக்கு இரண்டு தினங்களில் மகளிர் உரிமைத் தொகை கிடைக்கும் என்று சீவல்சரக ஊராட்சி ஜெ.புதுக்கோட்டையில் நடைபெற்ற என் வாக்குசாவடி வெற்றி வாக்குசாவடி தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர் ஐ.பெரியசாமி பேசியதோடு, தமிழகத்தில் திராவிட மாடல் ஆட்சி நாயகர் கழகத் தலைவர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திட்டங்களால் பெண்களின் வாழ்வாதாரம் உயர்ந்துள்ளது என்று அமைச்சர் ஐ.பெரியசாமி பெருமிதமாக கூறினார். அருகில் ஆத்தூர் தொகுதி தலைமைக் கழக தேர்தல் பொறுப்பாளர் கள்ளிப்பட்டி மணி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், ஒன்றிய செயலாளர் ராஜேந்திரன் உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

தமிழ்நாட்டில் உள்ள

பண்டைய ஈமச்சின்ன தளங்களின் தற்போதைய நிலை என்ன?

மக்களவையில் வேலூர் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, டிச.12-

1958ஆம் ஆண்டின் தொல்லியல் நினைவுச்சின்னங்கள் மற்றும் தொல் பொருள் பாதுகாத்தல் சட்டத்தின் பிரிவு 35 அடிப்படையில் தமிழ்நாட்டில் முற்றிலுமாக சிதைந்து காணாமல் போன பாதுகாக்கப்பட்ட ஈமச்சின்னங்கள் எனும் மெகாலித்திக் சின்னங்களை ஒன்றிய அரசின் பாதுகாக்கப்பட்ட புராதன சின்னங்கள் பட்டியலிலிருந்து நீக்குவதற்காக ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்குமா? என்று மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

இது தொடர்பாக அவரது கேள்விகள் வருமாறு:-

(a) இந்திய தொல்லியல் துறையின் தமிழ்நாட்டில் சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளி தொல்லியல் சர்க்கிளில் உள்ள 400க்கும் மேற்பட்ட பாதுகாக்கப்பட்ட தொல்லியல் சின்னங்கள்/ புராதன தளங்களில் சுமார் 157 மெகாலித்திக் சின்னங்கள்/ பண்டைய ஈமச்சின்னங்கள் உள்ளன என்பது உண்மையா? அவை தொடர்பான விவரங்கள் யாவை? இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியின் போது கண்டறியப்பட்ட சில மெகாலித்திக் நினைவிடங்கள்/ பண்டைய ஈமச்சின்னங்கள் நாளடைவில் ஏற்பட்ட விரிவான வேளாண்மை, அதிவேக நகர்மயமாக்கம் மற்றும் உட்கட்ட வளர்ச்சிகளால் தற்போது முற்றிலுமாக காணாமல் போய்விட்டன என்பது உண்மையா? ஆம் எனில் அவற்றின் விவரங்கள்

தருக?

(b) முற்றிலுமாக சிதைந்து காணாமல் போன பாதுகாக்கப்பட்ட ஈமச்சின்னங்கள் எனும் மெகாலித்திக் சின்னங்களைக் கண்டறிந்து பதிவு செய்ய இந்திய தொல்லியல் துறை (ASI) அண்மை காலத்தில் எந்தவொரு ஆய்வையும் மேற்கொண்டுள்ளதா? மேற்கொண்டிருந்தால் அவற்றின் விவரங்கள் தருக?

(c) நகர்மயமாக்கத்தால் காணாமல் போன தமிழ்நாட்டில் உள்ள மெகாலித்திக் ஈமச்சின்னங்களை பாதுகாக்கப்பட்ட புராதன சின்னங்கள் பட்டியலிலிருந்து நீக்குவதற்கான எந்தவொரு கோரிக்கையும் அரசிடம் வந்திருக்கிறதா? இருந்தால் அவற்றின் விவரங்கள் தருக?

(d) அவ்வாறு காணாமல் போன மெகாலித்திக் ஈமச்சின்னங்களை ஒன்றிய அரசின் பாதுகாக்கப்பட்ட புராதன சின்னங்கள் பட்டியலிலிருந்து நீக்குவதற்காக அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை?

(e) 1958ஆம் ஆண்டின் தொல்லியல் நினைவுச்சின்னங்கள் மற்றும் தொல் பொருள் பாதுகாத்தல் சட்டத்தின் பிரிவு 35 அடிப்படையில் ஒன்றிய அரசின் பாதுகாப்புக் குறியீட்டில் இருந்து காணாமல் போன பண்டைய ஈமச்சின்னங்களை/தளங்களை பாதுகாக்கப்பட்ட தொல்லியல் சின்னங்கள் பட்டியலிலிருந்து நீக்க ஒன்றிய அரசால் எடுத்த நடவடிக்கைகள்; மற்றும்

(f) தமிழ்நாட்டில் கூடுவாஞ்சேரி, நன்மங்கலம், பல்லாவரம், பெருங்களத்தூர், செம்பாக்கம், சித்தலப்பாக்கம், புனித தாமஸ் மவுண்ட், திருநீர்மலை, திரிசுலம், வள்ளஞ்சேரி மற்றும் வண்டலூர் ஆகிய இடங்களிலுள்ள பண்டைய ஈமச்சின்ன தளங்களின் தற்போதைய நிலை யாது?

இவ்வாறு அவர் கேள்விகள் கேட்டிருந்தார்.

அதற்கு ஒன்றிய அரசின் கலாச்சாரம் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம் வருமாறு:

தமிழ்நாடு மாநிலத்தில், இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறையின் (ASI) அதிகார வரம்பின் கீழ், சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளி வட்டங்களை உள்ளடக்கிய 412 பழங்கால நினைவுச்சின்னங்கள் மற்றும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த தொல்பொருள் தளங்கள் உள்ளன. இவற்றில், 158 வெவ்வேறு வகையான மெகாலிதிக் ஈமச்சின்னங்கள் ஆகும்.

தமிழ்நாட்டில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பாதுகாக்கப்பட்ட நினைவுச்சின்னங்கள் / தளங்களாக அறிவிக்கப்பட்ட மெகாலிதிக் நினைவுச்சின்னங்கள் ஈமச்சின்னங்கள் எதுவும் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு காணாமல் போகவில்லை அதனால் முற்றிலுமாக சிதைந்து காணாமல் போன பாதுகாக்கப்பட்ட ஈமச் சின்னங்களைக் கண்டறிந்து பதிவு செய்ய இந்திய தொல்லியல் துறை (ASI) அண்மை காலத்தில் ஆய்வை மேற்கொண்டுள்ளதா? என்ற கேள்வி எழவில்லை.

சில மெகாலிதிக் தளங்கள் ஈமச்சின்னங்கள் தொடர்பான பாதுகாப்பு அறிவிப்புகளை திரும்பப் பெறக் கோரி தனிநபர்கள் மற்றும் குடியிருப்பாளர்கள் நலச் சங்கங்களிடமிருந்து அரசு சில பிரதிநிதித்துவங்களைப் பெற்றுள்ளது. அவை பின்வருமாறு

1.காஞ்சிபுரம் மாவட்டம் எழிச்சூரில் உள்ள மெகாலிதிக் கல்படுக்கைகள்/கல்வட்டங்கள் தொடர்பாக 11.4.2025 தேதியிட்ட கிஷோர் வாங்கலின் பிரதிநிதித்துவம்.

2.காஞ்சிபுரம் மாவட்டம், செம்பாக்கம், பெருங்கற்கால கல்படுக்கைகள்/கல்வட்டங்கள் தொடர்பாக 8.11.2024 தேதியிட்ட செம்பாக்கம் பகுதி குடியிருப்பாளர்கள் நலச் சங்கத்தின் பிரதிநிதித்துவம்.

எனவே 1958ஆம் ஆண்டின் தொல்லியல் நினைவுச் சின்னங்கள் மற்றும் தொல் பொருள் பாதுகாத்தல் சட்டத்தின் பிரிவு 35 அடிப்படையில் ஒன்றிய அரசின் பாதுகாப்பில் இருந்து முற்றிலும் காணாமல் போன பண்டைய ஈமச் சின்னங்களை/தளங்களை பாதுகாக்கப்பட்ட தொல்லியல் சின்னங்கள் பட்டியலிலிருந்து நீக்குவதற்கான கேள்வி எழவில்லை.

மேலும் கூடுவாஞ்சேரி, நன்மங்கலம், பல்லாவரம், பெருங்களத்தூர், செம்பாக்கம், சித்தாலப்பாக்கம், செயிண்ட் தாமஸ் மவுண்ட், திருநீர்மலை, திரிசூலம், வல்லஞ்சேரி மற்றும் வண்டலூர் ஆகிய இடங்களில் உள்ள பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் நகரமயமாக்கல் மற்றும் தொடர்புடைய வளர்ச்சி நடவடிக்கைகளால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன, இதன் விளைவாக பாதுகாக்கப்பட்ட, தடை செய்யப்பட்ட மற்றும் ஒழுங்குபடுத்தப்பட்ட பகுதிகளுக்குள் ஆக்கிரமிப்புகள் மற்றும் அங்கீகரிக்கப்படாத கட்டுமானங்கள் ஏற்பட்டுள்ளன.

AMASR சட்டம், 1958 (2010 இல் திருத்தப்பட்டது) மற்றும் தொடர்புடைய விதிகளின்படி, இத்தகைய மீறல்களுக்கு எதிராக ASI பணியை நிறுத்தவும்/காரணம் காட்டும் அறிவிப்புகளை வெளியிட்டுள்ளது. வழக்குகள் தேவையான நடவடிக்கைகளுக்காக சம்பந்தப்பட்ட மாவட்ட அதிகாரிகள் மற்றும் உள்ளூர் காவல்துறைக்கு அனுப்பப்பட்டுள்ளன, மேலும் அங்கீகரிக்கப்படாத செயல்பாடுகளைத் தடுக்க தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு. இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறியுள்ளார். இந்த நட்சத்திரக் குறியிட்ட வினாவிற்கு துணைக் கேள்விகள் கேட்கும் வாய்ப்பு கிட்டவில்லை

திருப்பத்தூர் நகரம் மீனாட்சி அரசு பெண்கள்மேல்நிலைப்பள்ளி (மு) அரசு மாதிரி பள்ளியில் பயிலும் மாணவ – மாணவிகளுக்கு 5 ஆண்டு கேள்வி வினா தொகுப்புகளை சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. வழங்கினார்.

தேனி வடக்கு மாவட்டம் பெரியகுளம் வடக்கு ஒன்றியம் எ.புதுப்பட்டியில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி மற்றும் தமிழ்நாடு தலைகுனியாது பிரச்சாரம் பெரியகுளம் வடக்கு ஒன்றிய செயலாளர் எல்.எம். பாண்டியன் தலைமையில் நடைபெற்றது உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் எல். மூக்கையா, சரவணகுமார் எம்.எல்.ஏ. பெரியகுளம் தொகுதி பார்வையாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முத்துராமலிங்கம், வடக்கு மாவட்ட அவைத் தலைவர் தலைவர் பி.டி.செல்லபாண்டியன், முன்னாள் பேரூராட்சி சேர்மன் அன்பழகன், வடக்கு மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் ராம்ஜி மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதி திருவெண்ணைய் நல்லூர் மத்திய ஒன்றியம் டி.எடப்பாளையம் ஊராட்சியில் முன்னாள் அமைச்சர் கழக துணை பொதுச் செயலாளர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. அரசு ஆரம்ப துணை சுகாதார நிலையம் மற்றும் சுடுகாட்டுக்கும் செல்லும் சிமெண்ட் சாலையினை பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் ஒன்றிய கழகச் செயலாளர்கள். பி.வி.ஆர். சு.விசுவநாதன், கை.ரா. சடகோபன் ஒன்றிய குழு தலைவர் கு. ஓம்சிவ சக்திவேல், நகர செயலாளர் பூக்கடை கணேசன், ஒன்றிய துணை செயலாளர் ஏழுமலை, ஊராட்சி மன்ற தலைவர் மம்மி (எ) அப்துல்லா, ஒன்றிய கவுன்சிலர் உமா மகேஸ்வரி, சதீஷ்குமார், கிளை செயலாளர் கண்ணன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் கிருஷ்ணராஜ், தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி குமரவேல், நகர இளைஞரணி துணை அமைப்பாளர் சதாம், நகர மாணவரணி அமைப்பாளர் ராஜ்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

தென்சென்னையில்

சூரிய மின்கூரை மூலம் 7357 வீடுகள் மின்சாரம் பெறுகின்றன!

தமிழச்சி தங்கபாண்டியன் கேள்விக்கு ஒன்றிய அரசு பதில்!

புதுடெல்லி, டிச.12-

தென்சென்னை தொகுதி எம்.பி. தமிழச்சி தங்கபாண்டியன் நாடாளுமன்ற மக்களவையில் பிரதமரின் சூரிய மின்கூரை அமைப்பு திட்டம் தொடர்பான கேள்விகளை கேட்டிருந்தார்.

குறிப்பாக சென்னையில் அதன் செயல்பாடு, தாமதத்துக்கான காரணங்கள் போன்றவற்றை கேட்டார்.

இதற்கு ஒன்றிய புதிய மற்றும் புதுப்பிக்கவல்ல எரிசக்தி இணை அமைச்சர் திரு.ஸ்ரீபாத் யெசோ நாயக் எழுத்துப்பூர்வமாக பதில் அளித்தார்.

அந்த பதிலில் கூறப்பட்டு இருப்பதாவது:

பிரதமரின் சூர்யா கர் முப்த் பிஜிலி யோஜனா என்பது கூரை சூரிய சக்தி அமைப்புகளை நிறுவுவதற்கான ஒரு தேவை சார்ந்த திட்டமாகும். இதில் உள்ளூர் மின்வினியோக நிறுவனங்களின் கிரிட் இணைக்கப்பட்ட மின்சார இணைப்பைக் கொண்ட, அனைத்து குடியிருப்பு நுகர்வோரும் இந்த திட்டத்துக்கான தேசிய போர்ட்டலில் விண்ணப்பிக்கலாம்.

தென் சென்னையை உள்ளடக்கிய சென்னை மாவட்டத்தில், 30.11.2025 நிலவரப்படி திட்டத்தின் தேசிய போர்ட்டலில்

மொத்தம் 6,394 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. மொத்தம் 5,307 கூரை சூரியசக்தி அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன. இது 7,357 வீடுகளுக்கு பயன் அளிக்கிறது.

இந்த திட்டத்தின் கீழ், கூரை சூரிய சக்தி அமைப்புகளை நிறுவும் வீடுகள், நிறுவல் ஆய்வு செய்யப்பட்டு அந்தந்த மின்வினியோக நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்டதும் மானியத்தை மீட்டெடுக்கலாம். மானியத்தை மீட்டெடுக்க விண்ணப்பித்த வுடன், மானியம் வழங்குவதற்கான செயல்முறை தொடங்கப்பட்டு, அது பயனாளியின் வங்கிக்கணக்கில் செலுத்தப்படும்.

இதற்கு பொதுவாக 15 நாட்கள் ஆகும்.

தமிழ்நாட்டில் நடைமுறையில் உள்ள உத்தரவுகளின்படி, இந்த திட்டத்தின் கீழ் கூரை சூரிய சக்தியை நிறுவும் வீடுகள் நிகர அளவீட்டு வழிமுறையின் கீழ் வருகின்றன. இதில் உற்பத்தி செய்யப்படும் சூரிய சக்தி வீட்டின் மின்சார நுகர்வுக்கு ஏற்ப சரிசெய்யப்படுகிறது. இதன் மூலம் மொத்த மின்சாரக் கட்டணமும் குறைகிறது.

தமிழ்நாட்டில் நகர்ப்புறங்கள் உள்பட நாடு முழுவதும் இந்த திட்ட செயல்பாட்டை அதிகரிக்க புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் பின்வரும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது. தேசிய போர்ட்டலில் பதிவு செய்வதில் இருந்து குடியிருப்பு நுகர்வோரின் வங்கிக்கணக்கில் நேரடியாக மானியம் வழங்குவது வரை அனைத்தும் ஆன்லைன் செயல்முறை.

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிடம் இருந்து சலுகை வட்டி விகிதத்தில் 10 ஆண்டுகள் கால அவகாசத்துடன் பிணையமற்ற கடன் கிடைக்கும். தொழில்நுட்ப சாத்தியக் கூறு தேவையை தள்ளுபடி செய்வதன் மூலம் ஒழுங்குமுறை ஒப்புதல் செயல்முறை எளிதாக்கப்பட்டு உள்ளது. 10 கிலோவாட் வரை தானியங்கி சுமை மேம்பாட்டை அறிமுகப்படுத்துதல். நிகர அளவீட்டு ஒப்பந்தம் தேசிய போர்ட்டலில் பயன்பாட்டின் ஒரு பகுதியாக மாற்றப்பட்டுள்ளது.

போதுமான மற்றும் தகுதிவாய்ந்த விற்பனையாளர்கள் கிடைப்பதை உறுதி செய்வதற்காக விற்பனையாளர்களைப் பதிவு செய்வதற்கான எளிமைப்படுத்தப்பட்ட செயல்முறை உள்ளது. திறமையான மனிதவளத்தை உருவாக்குவதற்கான திறன் மேம்பாடு மற்றும் பயிற்சித் திட்டங்கள் நடத்தப்படுகின்றன. நாட்டில் உள்ள முன்னணி செய்தித்தாள்களில் அச்சு விளம்பரம், தொலைக்காட்சி விளம்பர பிரசாரங்கள், பிராந்திய சேனல்கள் உள்ளிட்ட எப்.எம். நிலையங்கள் முழுவதும் வானொலி பிரசாரங்கள் போன்ற விழிப்புணர்வு மற்றும் வெளிநடவடிக்கை நிகழ்ச்சிகள் மூலம் திட்டம் பற்றிய விழிப்புணர்வை உருவாக்குதல்.

மாநிலங்கள், மின் வினியோக நிறுவனங்கள் உள்பட பல்வேறு நிலைகளில் திட்டத்தின் முன்னேற்றத்தை தொடர்ந்து கண்காணித்தல். பிராந்திய மதிப்பாய்வுக் கூட்டங்களை நடத்துதல். குறைகளை சரியான நேரத்தில் தீர்க்கும் வகையில் குறை தீர்க்கும் வழிமுறை நிறுவப்பட்டு உள்ளது. 15555 என்ற தொலைபேசி எண்ணைக் கொண்ட அழைப்பு மையம் 12 மொழிகளில் செயல்படுகிறது.

தமிழ்நாட்டில் - 2-3ஆம் நிலை நகரங்களில்

டிஜிட்டல் கட்டண உள்கட்டமைப்பு வலுப்படுத்தப்படுமா?

மக்களவையில் திருவண்ணாமலை சி.என். அண்ணாதுரை கேள்வி!

புதுடெல்லி, டிச.12-

தமிழ்நாட்டில் 2-ஆம் நிலை 3ஆம் நிலை நகரங்களில் டிஜிட்டல் கட்டண உள்கட்டமைப்பை வலுப்படுத்த எடுத்த நடவடிக்கை என்ன என்று திருவண்ணாமலை தொகுதி உறுப்பினர் சி.என். அண்ணாதுரை மக்களவையில் கேள்வி எழுப்பினார்.

அவரது கேள்விகள் வருமாறு:

ஒருங்கிணைந்த கட்டண இடைமுகம் (UPI) எந்த அளவிற்கு மற்ற முக்கிய உலகளாவிய நிகழ்நேர கட்டண அமைப்புகள்/நுழைவாயில்களை விஞ்சியுள்ளது, குறிப்பாக பரிவர்த்தனை அளவின் அடிப்படையில்; மற்ற முன்னணி சர்வதேச நிகழ்நேர கட்டண தளங்களுடன் ஒப்பிடும்போது UPI இன் தற்போதைய நிலை மற்றும் சந்தைப் பங்கை விளக்கும் விரிவான ஒப்பீடு;

டிஜிட்டல் பணப்பரிமாற்றங்களை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்ட அரசாங்க முயற்சிகளின் நேரடி விளைவாக, UPI தளத்தில் இணைந்த புதிய வணிகர்கள் மற்றும் சிறு வணிகங்களின் மொத்த எண்ணிக்கை;

தமிழ்நாட்டில் ரூபே இணைக்கப்பட்ட கணக்குகள் மூலம் செய்யப்படும் UPI பரிவர்த்தனைகளின் அளவு மற்றும் மதிப்பு;

நாட்டின் சிறு வணிகர்களிடையே, குறிப்பாக மத்தியப் பிரதேசத்தின்

தேவாஸ்ஷாஜாபூர் மற்றும் ராஜஸ்தானின் பாலி மக்களவைத் தொகுதியில், முக்கிய அரசுத் திட்டங்கள் மற்றும் UPI ஐ ஏற்றுக்கொள்வதில் அவற்றின் தாக்கம்;

குறிப்பாக தமிழ்நாட்டில் இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் டிஜிட்டல் கட்டண உள்கட்டமைப்பை வலுப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்; மற்றும்

குறிப்பாக தமிழ்நாட்டில் பொது சேவைகள், போக்குவரத்து மற்றும் மின் வணிக தளங்களுடன் RUPAY மற்றும் UPI அமைப்புகளை ஒருங்கிணைக்க அரசாங்கம் ஏதேனும் புதிய முயற்சிகளை முன்மொழிகிறதா, அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

இவ்வாறு அவர் கேள்விகள் கேட்டிருந்ததாக

அதற்கு நிதி அமைச்சகத்தின் இணை அமைச்சர் ஸ்ரீ பங்கஜ் சௌத்ரி அளித்த பதில்கள் வருமாறு:

ஜூன் 2025 தேதியிட்ட 'வளர்ந்து வரும் சில்லறை டிஜிட்டல் கொடுப்பனவு கள் (இடைச்செயல்பாட்டின் மதிப்பு)' என்ற சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) அறிக்கை, பரிவர்த்தனை அளவின் அடிப்படையில் உலகின் மிகப்பெரிய சில்லறை விரைவு கட்டண முறையாக (FPS) ஒருங்கிணைந்த கட்டண இடைமுகத்தை (UPI) அங்கீகரித்துள்ளது. மேலும், 'ப்ரைம் டைம் ஃபார் ரியல்டைம்' 2024 குறித்த ACI உலகளாவிய அறிக்கையின்படி, உலகளாவிய நிகழ்நேர கட்டண முறை பரிவர்த்தனை அளவில் UPI சுமார் 49% பங்கைக் கொண்டுள்ளது.

மற்ற முன்னணி சர்வதேச நிகழ்நேர கட்டண தளங்களுடன் ஒப்பிடும் போது UPI இன் தற்போதைய நிலை மற்றும் சந்தைப் பங்கை விளக்கும் விரிவான ஒப்பீடு இணைப்பு I இல் இணைக்கப்பட்டுள்ளது.

UPI உள்ளிட்ட டிஜிட்டல் கட்டண முறைகளை ஏற்றுக்கொள்வதில் சிறு வணிகர்களை ஆதரிப்பதற்காக, அரசாங்கம், இந்திய ரிசர்வ் வங்கி (RBI) மற்றும் இந்திய தேசிய கட்டணக் கழகம் (NPCI) ஆகியவற்றால் அவ்வப்போது பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றில், குறைந்த மதிப்புள்ள BHIMUPI பரிவர்த்தனைகளை ஊக்குவிப்பதற்கான ஊக்கத் திட்டம் மற்றும் அடுக்கு3 முதல் 6 மையங்களில் டிஜிட்டல் கட்டண உள்கட்டமைப்பை (POS டெர்மினல்கள் மற்றும் QR குறியீடுகள் போன்றவை) பயன்படுத்துவதற்கு வங்கிகள் மற்றும் நிதி தொழில்நுட்பங்களுக்கு மானிய ஆதரவை வழங்கும் கட்டண உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (PIDF) ஆகியவை அடங்கும். அக்டோபர் 31, 2025 நிலவரப்படி, அடுக்கு 3 முதல் 6 மையங்களில் PIDF மூலம் சுமார் 5.45 கோடி டிஜிட்டல் டச் பாயிண்டுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும், 2024-25 நிதியாண்டின்படி, சுமார் 6.5 கோடி வணிகர்களுக்கு மொத்தம் 56.86 கோடி QR பயன்படுத்தப்பட்டுள்ளன.

UPI இணைக்கப்பட்ட RUPAY கணக்குகள் மூலம் தொடங்கும் பரிவர்த்தனைகளைப் பிரிப்பது தனித்தனியாகக் கருதப்படவில்லை என்று NPCI தெரிவித்துள்ளது. இருப்பினும், 2025 அக்டோபரில் தமிழ்நாடு மாநிலம் 81.20 கோடி UPI பரிவர்த்தனைகளுக்கு பங்களித்துள்ளது, இதன் மதிப்பு 1.28 லட்சம் கோடி ஆகும்.

தமிழ்நாடு உட்பட நாடு தழுவிய அளவில் பொது சேவைகள், போக்குவரத்து மற்றும் மின் வணிக தளங்கள் உள்ளிட்ட வணிகங்களில் ரூபே மற்றும் யுபிஐ மூலம் டிஜிட்டல் பரிவர்த்தனைகளை ஆழப்படுத்த அரசு, ரிசர்வ் வங்கி மற்றும் NPCI ஆகியவை தொடங்கியுள்ளன.